Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடு வைகாசி மீ 31 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 16 (14 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 170

# மண்டைதீவு கடற்கரையில் 10 சடலங்கள்

## இந்தியாவுக்கு அகதிகளாக சென்றவர்கள் சுடப்பட்டனரா?

யாழ்ப்பாணம், ஜூன் 14

மண்டைதீவுக் கடற்கரையில் சுமார் பத்துச் சடலங்கள் கரை ஒதுங்கி இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களின் படகுகள் மீது கடற் படையினர் துப்பாக்கி அல்லது பீரங்கிப் பிரயோகம் செய்ததால் இறந்தவர்களது சடலங்களே இவ்வாறு கரை ஒதுங்கியதாகச் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்வதற்கான போதிய ஆதாரங்கள் இச்செய்தி எழுதப்படும் வரை கிடைக்கவில்லை.

குடாநாட்டில் பதற்ற நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து பலர் இங்கிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகப் புறப்பட்டது தெரிந்ததே.

அகதிகள் படகுகள் செல்வதை ஆரம்பத்தில் கண்டும் காணுதவர்கள் போல் இருந்த கடற்படையினர் இப்போது அவற்றை மறித்தும், அவைமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் வருகின்றனர்.

கடற்படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்துக்கு இலக்கான படகுகளில் சென்றவர்களின் சடலங்களே அனேகமாகக் கரைஒதுங்குதாக ஊகிக்கப்படுகிறது.

சுமார் பத்துச் சடலங்கள் மண்டைதீவுக் கடற்கரைப் பகுதியில் ஒதுங்கியிருந்ததாக அப்பகுதியில் இருந்து நேற்று வந்தவர்கள் மூலம் அறிய வந்தது.

இதே வேளை அகதிகள் படகுகளை வழி மறித்த கடற் படையினர் பலரை விசாரணைக்கெ என அழைத்துச் சென்றதாகவும், அவர்களில் சிலரைத் தடுத்து வைத்ததாகவும் அறியப் படுகிறது. (அ-10)

# முள்ளி முகாம் மூடப்பட்டது?

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமராட்சி அசம்பாவிதங்களின் போது இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட புதிய முள்ளி மினி முகாம் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்றுக் காலை வடமராட்சி சென்ற பொது மக்கள் முள்ளி முகாம் சிப்பாய்களால் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

மாலையில் மக்கள் திரும்பி வந்தபோது முள்ளி முகாமில் சிப்பாய்கள் எவரும் இருக்கவில்லை.

நேற்று மாலை பஸ்கள் எதுவும் அரச முகாமில் நிறுத்தப்பட்டுச் சோதனையிடப்படவில்லை. (இ-எ)

யாழ் சென். பீற்றர்ஸ் ஆலயக் குழுவினர்

## மந்திகை ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கு உணவுப் பொருள் வழங்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மெதடிஸ்த திருச்சபையின் யாழ் சென் பீற்றர்ஸ் ஆலய உக்கிராணக் குழுவினர் நேற்று மந்திகை ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கு உணவுப் பொருள்களை வழங்கினர்.

அருட்திரு கே. பி. கோவிந்தராஜ் தலைமையில் வடமராட்சி சென்ற 5 பேர் கொண்ட குழு உணவுப் பொருள்களை வழங்கியது.

மந்திகை ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் 270 நோயாளிகள் உணவுப் பொருள்களைப் பெற்றனர்.

இவர்களில் அனேகமானவர்கள் எரிகாயங்களுடன் உள்ள வயோதிபர்களும், பெண்களும் ஆவர் என்று குழுவினர் தெரிவித்தனர். (இ-எ)

முச்சந்தி முரளி



தமிழரைச் சாக்குமூடை நிலைமைக்குக் கொண்டு வந்திட்டினம் அப்பா! உணவுக் களஞ்சியத்திலை தடுத்துவைக்கிறதெண்டா பின்னை என்ன அர்த்தம்.?

## நட்வர்சிங் சென்னை வருகிறார்

சென்னை, ஜூன் 13

இனப்பிரச்சினை பற்றி பேச்சுக்களை நடத்த வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் இந்த வாரம் சென்னை விஜயம் செய்ய இருக்கிறார்.

முதலமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்டோருடன் இணை அமைச்சர் நட்வர் சிங் அப்போது பேச்சுக்களை நடத்துவார். (இ-எ)

★ யாழ்ப்பாணத்துக்கான

# உணவுப் பொருள்களை நேரடியாகக் கையளிக்க அனுமதிக்க வற்புறுத்து

## ஆனால் இலங்கை அதற்கு மறுப்பு

புதுடில்லி, ஜூன் 13

நிவாரண உணவுப் பொருள்களை யாழ் குடாநாட்டுக்கு நேரடியாகக் கொண்டு போய்க் கொடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று இந்தியா, ஸ்ரீலங்காவை வற்புறுத்தி வருகின்றது.

கடந்தவாரம் கொழும்பில் இந்தியத் தூதர் ஜே.என்.டிக்ஸிற் அமைச்சர் சாகுல் ஹமீதுவிடம் இந்திய அரசின் வழிமுறைகளைச் சமர்ப்பித்து இருந்தார் அல்லவா!

அவற்றில் இந்த நிலைப்பாட்டைத்தான் இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசோ, உணவுப் பொருள்களை இந்தியா கொழும்புக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து வருகின்றது.

யாழ் குடாநாட்டில் உணவுத் தட்டுப்பாடு இல்லை; அண்டை நாட்டுடன் நல்லுறவைப்பேண வேண்டும் என்ற காரணத்தினால் உணவுப்பொருள்களை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கின்றோம்.

ஆகவே அவற்றைக் கொழும்புக்கு அனுப்பி வைத்துஉதவுங்கள்.–இப்படி ஸ்ரீலங்காஅரசு கூறுகின்றது.

இந்த அளவில்தான் உணவுப் பொருள் விநியோகம் சம்பந்தமான இந்திய இலங்கைப் பேச்சுக்கள் உள்ளன–

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

பாதிக்கப்பட்ட யாழ் தமிழர்களுக்கு

# உணவுப் பொருள்களை விரைந்து அனுப்ப நடவடிக்கை

## எம். ஜீ. ஆரிடம் ராஜீவ் உறுதி

சென்னை, ஜூன் 14

பாதிக்கப்பட்டுள்ள யாழ் தமிழர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை விரைந்து அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி பிரதமர் ராஜீவகாந்தி மீண்டும் உறுதியளித்திருக்கின்றார்.

மூன்று தினங்களாக புதுடில்லியில் நடந்த பிரதமர் காந்தி—முதல்வர் இராமச்சந்திரன் சந்திப்புக்களின் போது இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

இத்தகவலை தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முதலமைச்சருடன் வெள்ளியிரவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் சென்னை திரும்பினார்.

பொருளாதார முற்றுகைக்கு உட்பட்ட யாழ் தமிழ்மக்கள் மீது இலங்கை அரசு இராணுவத் தாக்குதலை நடத்துவது 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது' போல் அமைந்துள்ளது என்று முதலமைச்சர் பிரதமருக்கு எடுத்துக் காட்டினார்.

யாழ் தமிழருக்கு உதவிப் பொருள்களை நேரடியாகவே இந்திய அரசு வழங்கவேண்டும் என்றும் முதலமைச்சர் பிரதமரைக் கேட்டுக்கொண்டார்.

இப்படி அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (இ-எ)

## லைசென்ஸ் எடுப்பதில் அக்கறை

யாழ்ப்பாணம், ஜூன்14

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வாகனச் சொந்தக்காரர்கள் வாகன லைசென்ஸ், காப்புறுதிப் பத்திரம் ஆகியவற்றை எடுப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். (இ-10)

## கப்பல்மூலம் வந்த இராணுவ வாகனங்கள்

மண்டைதீவு, ஜூன் 14

மண்டைதீவுஇராணுவ முகாமுக்கு நேற்று கப்பல்கள் மூலம் இராணுவ தளபாடங்களும், இராணுவ வாகனங்களும் கொண்டுவரப்பட்டன என்று நம்பப்படுகிறது.

நேற்றுக்காலைமண்டைதீவு கடற்பகுதியில் தரித்துநின்ற இரண்டு பாரிய கப்பல்களில் இருந்துஇத்தளபாடங்களும், இராணுவ வாகனங்களும் இறக்கப்பட்டன.

இதேவேளை ஹெலிக்கொப்டர் ஒன்றும் கப்பலுக்கும் கரையோரப் பகுதிகளுக்கும் தாழப் பறந்து பாதுகாப்பு வழங்கியது.

கோட்டை முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

மண்டைதீவில் இறக்கப்பட்ட இராணுவத் தளபாடங்கள் யாழ் கோட்டை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டன. (இ-10)

### சுபநேரம்

14–06–1987

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:–
8.53 முதல் 10.23 வரை

ராகுகாலம்:–
4. 23 முதல் 5. 53 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

சார்க் வெளியுறவு அமைச்சர் மாநாடு:

# ஸ்ரீலங்காவும் கலந்து கொள்ளும்

கொழும்பு, ஜூன் 14

புதுடில்லியில் இந்த வாரம் நடைபெறவிருக்கும் சார்க் வெளியுறவு அமைச்சர் மாநாட்டில் ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சரும் கலந்து கொள்வார்.

இப்படி கொழும்பில் வெளியுறவு அமைச்சு நேற்று அறிவித்தது.

இலங்கையின் இந்த முடிவு உடனடியாக புதுடில்லி அரசுக்கு அறிவிக்கப்பட்டது.

சார்க் அமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளான பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளுக்கு இலங்கை தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

இந்த நாடுகளுக்கு நன்றி தெரிவிக்க கடமைப் பட்டுள்ளோம்—

இப்படி வெளியுறவு அமைச்சர் ஜனப் ஹமீது தெரிவித்தார்.

சார்க் அமைப்பின் அதிகாரிகள் மட்ட மாநாடு இன்று ஞாயிறு புதுடில்லியில் ஆரம்பமாகிறது.

இதில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சுச் செயலாளர் திரு. டபிள்யூ. ரி. ஜெயசிங்கா கடந்த வெள்ளி புதுடில்லி புறப்பட்டுச் சென்றார்.

வெளியுறவு அமைச்சர் மட்டமாநாடு எதிர்வரும் வியாழன் ஆரம்பமாகும்.

சார்க் அமைப்பு அமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்ள ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது, புதன் கிழமை புதுடில்லி செல்வார். (இ-எ)

## ● இந்தியாவின் பாதுகாப்பு பிரச்சினை

ஹைதரபாத், ஜூன் 13

இந்தியாவைச் சுற்றியுள்ள பாதுகாப்பு சூழ்நிலை மாறிக்கொண்டே இருக்கின்றது.

இதனால் எமது இராணுவத்தை நவீனமயப் படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது.

இப்படி இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் தெரிவித்தார்.

ஹைதரபாத்தில் விமானப்படை அணிவகுப்பு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார். (இ-எ)

## பலாலி முகாம் சூட்டுக்கு இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 14

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக இளைஞர் ஒருவர் மரணமானார்.

இரண்டு பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

ரவி (வயது 20) என்ற இளைஞரே சிப்பாய்களின் சூட்டுக்கு இலக்காகி மரணமானவராவார். (இ-10)

## 4 தினங்களில் 800 அகதிகள்

இராமேஸ்வரம், ஜூன் 13

கடந்த நான்கு தினங்களில் சுமார் 800 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர்.

நேற்று மட்டும் 8 படகுகள் மூலம் சுமார் 400 தமிழ் அகதிகள் வந்தனர்.

இராணுவத்தாக்குதல் ஒரு புறம், பசிக் கொடுமை இன்னொரு புறம்— இப்படி தப்பி வந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய பாதுகாப்பை பாதிக்கும் சூழ்நிலையை ஸ்ரீலங்கா உருவாக்கக்கூடாது

---- திவாரி

இந்தியாவின் பாதுகாப்பைப்பாதிக்கும் சூழ்நிலையை ஸ்ரீலங்கா உருவாக்கக்கூடாது.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரி தெரிவித்தார்.

'இஸ்வெஸ்தியா' என்ற சோவியத் தினசரிக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் இக் கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் திவாரி மேலும் சொன்னதாவது; ஸ்ரீலங்கா அரசு தனது சொந்த மக்களுக்கே பொருளாதார முற்றுகை போடுவதை விடுத்து பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முன்வர வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு ஸ்ரீலங்கா அரசு இராணுவத் தீர்வு காண முடி



திவாரி

யாது; நாடவும் கூடாது– இப்படி அமைச்சர் திவாரி மேலும் தெரிவித்தார். (இ-எ)

# வடமராட்சியில் கைதானவர்களில் ஆயிரம்பேர் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 14

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது ஆயுதபடையினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் சுமார் ஆயிரம் பேர்வரை விடுவிக்கப்பட்டனர். இவர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவர்.

இப்படி அரசு நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 8பேர் கொலை!

## உதவிக்கு வந்த சிப்பாயும் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 14

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள கொடப்பத்த என்ற குடியேற்றக் கிராமத்தில் எட்டுப்பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அரசு அறிவித்துள்ளது.

இவர்களில் இரு பெண்களும் ஒரு குழந்தையும் அடங்கி உள்ளனர்.

இச் சம்பவத்தை அடுத்து அங்கு விரைந்த சிப்பாய்களிலும் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை இச் சம்பவம் நடந்தது. (இ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## இடவசதி

வியாபார ஸ்தாபனங்கள் இணைந்து செயற்படவும் பலவிதபொருட்களை ஒரே இடத்தில் விற்பனை செய்யவும் கட்டிட இடவசதி கோப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ளது. விபரங்களுக்கு: மு. சிவலோகநாதன், 443, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் அல்லது சோ. லோகேஸ்வரன், சட்டத்தரணி, கொழும்புத்துறை அல்லது இருவாலை ஒழுங்கை, கோப்பாய். (1417)


## காணி அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஜூன் 14

அராலிவடக்குசெல்வா சன சமூக நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு காணி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அராலி வடக்கைச் சேர்ந்த திரு. நா. மயில்வாகனம் என்பவரே இக் காணியை அன்பளிப்புச் செய்துள்ளார். (இ-161)

ஆகஸ்டில் நடைபெற உள்ள

# ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்தி வைக்குக

## வடமாகாண ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ:(உயர்தர) பரீட்சையை டிசம்பர் மாதம்வரை ஒத்திவைக்குமாறு வடமாகாண ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளது.

தமிழ் மக்களின், அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டு வாசிகளின் கல்வி வளர்ச்சியை நசுக்கு முகமாக அரசாங்கம் செய்து வந்த தரப்படுத்துதல், நூலகங்களை எரித்தல், கல்லூரிக் கட்டடங்களை தரைமட்டமாக்கல் போன்ற நாசகார நடவடிக்கைகளின் உச்சக் கட்டமாக யாழ் மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் இயங்கி வந்த பல கல்லூரிகளில் அண்மையில் அரசபடை முகாம்கள் அமைக்கப்பட்டன.

முகாம்களில் இருந்து ஷெல் அடிப்பது கல்லூரிகளையும், பாடசாலைகளையும் முகாம்கள் ஆக்குவது ஆகிய நடவடிக்கைகளால் ஏராளமான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இழந்துள்ளனர்.

அரசபடையினரின் அட்டூழியங்களால் இடம் பெயர்ந்த குடும்பங்களிலுள்ள மாணவரும் கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளன.

மாணவர் வரவின்மையால் பாடசாலைகள் இயங்கவில்லை.

இத்தகைய சூழ்நிலைகளால் மாணவரின் கல்வி பாழாகிறது.

இந்நிலையில், கடந்த ஆண்டிலும் இவ்வாண்டு முதல் தவணைக் காலத்திலும் ஒருவாறு தமது கல்வியைத் தொடர்ந்து படித்த ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்கள் இந்த இரண்டாம் தவணையில் உணவாலும், கல்வியாலும், இடத்தாலும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே இவர்கள் வருகிற ஆகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றுவது எப்படிச் சாத்தியம் ஆகும்?

பாடங்கள் முழுமையாக, பாடத்திட்டத் திற்கமையக் கற்பித்து முடிக்கப்படவில்லை.

மீட்டல் செய்யப்படவில்லை. கடந்தகாலப் பரீட்சை வினாக்கள் பற்றிய கலந்துரையாடல்கள் எப்பாடசாலையிலும் நடைபெறவில்லை.

அவலமான இந்நிலையில் மிகக் கடுமையான போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற எமது ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பு மாணவர் உளரீதியாகவும் பாடத்திட்ட ரீதியாகவும் தயாராகவில்லை.

இவற்றின் காரணமாக ஆகஸ்டில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சையை டிசம்பர் வரை ஒத்திவைக்குக.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டக்கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கம் இவ்வாறு கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது. (இ)

## பண்ணைகத்தில் பன்னவேலை பயிற்சி

வட்டுக்கோட்டை, ஜூன் 11

பண்ணைகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் பன்னவேலைப் பயிற்சி வகுப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

இலவசமாக நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்ள விரும்பும் பயிற்சியாளர்கள் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர். (இ-161)



யாழ் நகர் தற்போது ஓரளவு வழமைக்குத் திரும்பி உள்ளபோதிலும் நகரின் மத்தியில் உள்ள கடைப்பகுதிகள் இன்று மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றன. வெறிச்சோடிய நிலையில் காணப்படும் சேதம் அடைந்த கடைகள் சிலவற்றைப் படத்தில் காணலாம். படம்: சண். ஜோண்சன்

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில்

# வீடுகள், தோட்டங்களை பார்க்கச் சென்றோர் மீது சூடு!

காங்கேசன்துறை, ஜூன், 14

தமது வீடுகள், தோட்டங்கள், கால்நடைகளைப் பார்த்துவரச் சென்ற பொதுமக்களை நோக்கி சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் இடம் பெற்றது.

பாவிட்டபுரம் சந்தியைச் சூழவுள்ள வீடுகள் தொழில் நிலையங்கள் மட்டுமன்றி வெற்றிலைத் தோட்டங்களிலும் சிப்பாய்கள் பதுங்கி இருக்கின்றனர் என்று அங்கு சென்றவர்கள் கூறுகிறார்கள்.

வீமன்காமம் வெங்காயச் சங்கத்திற்கருகாமையிலும் இராணுவம் நிலைகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கீரிமலை கலட்டிப் பகுதியிலும் இராணுவ நடமாட்டம் காணப்படுகிறது.

கீரிமலைச் சந்தி, கொல்லங்கலட்டிப் பகுதிகளிலிருந்து இராணுவம் பின்வாங்கிச் சென்றுள்ளது.

வீமன்காமம் விளிய வரைப் பகுதியில் பல வீடுகள் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் எடுத்து வீசப்பட்டுள்ளன.

சில வீடுகளில் இருந்த உணவுப் பொருள்களை எடுத்து சிப்பாய்கள் சமைத்துச் சாப்பிட்டுள்ளனர். (இ-68)

# இந்தியாவைக் கண்டித்து மகளிர் ஊர்வலம்

கொழும்பு, ஜூன் 14

கொழும்பில் மகளிர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்திய அரசுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை கடந்த வெள்ளியன்று நடத்தினர்.

இந்திய தூதரகத்தின் முன் முடிவுற்ற இந்த ஊர்வலத்தில் சண்டி, காலி ஆகிய பகுதி மகளிர் அமைப்புக்கள் சிலவற்றின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தின் இறுதியில் இந்தியத் தூதரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்திய அரசு தீவிரவாதிகளுக்கு நிதி அளிப்பதும், பயிற்சி அளிப்பதும் கண்டிக்கத்தக்க செயல்கள் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ-ள)

# அசோகச் சக்கரவர்த்தி காட்டிய நீதி முறையை இந்தியா மறந்துவிட்டது

- சொல்பவர் பிரேமதாச!

கொழும்பு, ஜூன் 14

அசோக சக்கரவர்த்தி காட்டிய நீதி முறையை இந்தியா மறந்து செயல்படுகிறது.

பிரதமர் பிரேமதாச மேற்கண்டவாறு சொன்னார்.

மிஹிந்தலையில் சடந்த சமயக் கூட்டத்தில் பிரதமர் பேசினார்.

அப்போது அவர் மேலும் சொன்னதாவது:

நீதி தவறாத அரசு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அசோகச் சக்கரவர்த்தி உலகுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அன்று அவர் விரும்பியிருந்தால் இலங்கையைக் கைப்பற்றி இருக்க முடியும்.

ஆனால் அவர் நீதியான வழியில் சென்று இலங்கை மக்களின் அன்பைப் பெற்றார்.

இந்த நீதி முறையை இந்தியா மறந்து விட்டது.

முன்னர் ஒரே நாடாக இருந்த இந்தியா இன்று பல பிராந்திய, மாநிலங்களாகப் பிரிந்து கிடக்கின்றது.

இந்தியா மேலும் பிளவுபடக் கூடிய ஆபத்துத் தோன்றியுள்ளது.

இதற்கு மத்திய அரசின் நடவடிக்கையே காரணம்.

இன்றைய ஆட்சியாளர் மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

இப்படி பிரதமர் தெரிவித்தார். (இ-எ)

## அகதிகளுக்கு அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஜூன் 14

இராணுவத்தினரின் ஹெலித்தாக்குதலுக்கும் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கும் அஞ்சி தங்கள் கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்து வந்து சங்கானை நிற்சாமம் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதேசத்தில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்குவட்டுக்கோட்டை லயன்ஸ்கழக முன்னாள் தலைவர்டாக்டர் செல்லையாநாகநாதர்பால்மா, அரிசி, மரக்கறி முதலான உணவுப் பண்டங்களை அன்பளிப்புச் செய்தார். (இ-161)

# இலங்கைத் தமிழரை இனக்கொலையிலிருந்து காப்பாற்றவேண்டும்

- இளைஞர் காங்கிரஸ் தலைவர்

சென்னை, ஜூன் 13

எவ்வகையிலாவது இந்திய அரசு, இலங்கைத் தமிழரை இனக்கொலையில் இருந்து காப்பாற்றியாகவேண்டும்.

இப்படி அகில இந்திய இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவு தலைவரும் எம், பியுமான ஆனந்த் சர்மா தெரிவித்தார்.

சென்னையில் இளைஞர் காங்கிரஸ் நடத்திய மௌன ஊர்வலத்தின் முடிவில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவரும்எம். பியுமான திரு, ஜெயமோஹன், திரு. தங்கபாலு ஆகியோரும் பேசினர். (இ-எ)

# லங்காபுவத் செய்திக்கு சர்வோதயம் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

சர்வோதய இயக்கம் நான்கு லொறிகளில் கொண்டு வந்த சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான அரிசி, சீனி, பால்மா வகை, மீன்ரின், தேங்காய் ஆகியவற்றை போராளிகள் இயக்கங்கள் பறித்து விட்டதாக 'லங்காபுவத்' அறிவித்தது மிகவும் பொய்யானதும் தவறானதுமாகும்.

—இப்படி சர்வோதய இயக்கத்தின் வடப்குதி வெளிக்கள இயக்குநர் திரு. கே. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இந்த உணவு வகைகள் சர்வோதய தொண்டர்களால் கொடிகாமம், எழுதுமட்டுவாள், மட்டுவில், மல்லாகம், தெல்லிப்பளை, கோப்பாய், நீர்வேலி, சங்கானை முதலிய இடங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந்த உணவு வகைகள் வடமராட்சிப் பகுதிகளிலும் விநியோகிக்கப்பட உள்ளன.

மேலும் தொடர்ந்து சர்வோதய இயக்கம் கொழும்பில் இருந்து இன்னும் உணவு வகைகளையும், மருந்து வகைகளையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அனுப்பும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ)

# மொழி ரீதியான பிராந்தியம் வழங்கினால் சிங்கள மக்கள் 'தமிழீழம்' என நினைப்பார்கள்

## ராணுவக் கப்டன் சொல்கிறார்

அச்சுவேலி, ஜூன் 14

வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைத்து மொழிவழி பிராந்தியம் ஒன்றை ஏற்படுத்தினால் சிங்கள மக்கள் அது தமிழ் ஈழம் என்றே நினைப்பார்கள்.

மதகுரு ஒருவரிடம் இராணுவக் கப்டன் ஒருவர் மேற்கண்டவாறு கூறினாராம்.

அச்சுவேலியில் முகாமிட்டு நான்கு தினங்கள் தங்கியிருந்த இராணுவத்தின் உயர் அதிகாரிகள் அச்சுவேலிப் பகுதி மதகுரு ஒருவருடன் இனப்பிரச்சினைபற்றி தாராளமாக உரையாடினர்.

அப்போதே மேற்கண்ட கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி அச்சுநகர் பகுதியில் இராணுவ உயர் அதிகாரிகள் முகாமிட்டிருந்தபோது இணைப்பதிகாரி திரு. ஜெரி சில்வா, கப்டன் விமலரத்தின, கேர்ணல் ஜெயவர்த்தன பண்டார ஆகியோர் மதகுருவுடன் உரையாடினர்.

அதிகாரிகள்:–எங்களது அச்சுவேலி வருகை நியாயமானதும் வரவேற்கத் தக்கதும் தானே?

மதகுரு:– தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்களுக்கு விளங்கப்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டால் இத்தகைய அழிவுகள் சேதங்கள் தமிழ்ப்பகுதியில் ஏற்பட்டிருக்காதே! அதனைச் செய்வதற்கு ஏன் தயக்கம்?

கப்டன் விமலரத்தின: இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கு தமிழ் இளைஞர்கள் தனித்தனி இரண்டு மாகாணசபைகளை வடக்கிலும் கிழக்கிலும் ஏற்க வேண்டும். அப்படியான தீர்வை ஏற்பதற்கு நீங்களும் (மதகுரு) ஆலோசனை வழங்க வேண்டும்.

மதகுரு:– இரண்டு மாகாணங்களையும் இணைத்து மொழிவழிப் பிராந்தியம் ஒன்றை வழங்குவது தவறில்லைத் தானே?

விமலரத்தின:– அப்படி மொழிரீதியிலான பிராந்தியம் வழங்கப்பட்டால் அது 'தமிழ் ஈழம்' என சிங்கள மக்கள் நினைப்பார்கள்.

மதகுரு:– சிங்கள மக்களுக்கு பிரச்சினையை விளங்கச்செய்து இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

மதகுருவுடன் பிறிதொரு சந்தர்ப்பத்தில் உரையாடிய சிப்பாய் ஒருவர் 'இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படாவிடில் மூன்றும் உலக மகாயுத்தம் ஒன்று ஏற்பட்டு நாங்கள் (இராணுவம்) எல்லாம் அழிய வேண்டியது தான்'— எனக் கூறினாராம். (உ-11)

மக்கள் முகம்

## ஸ்ரீமுருகன்சனசமூக சேவா வாலிபர் சங்கம்

வட்டுக்கோட்டை, ஜூன் 14

பண்ணைகம் ஸ்ரீ முருகன் சனசமூக சேவா வாலிபர் சங்க புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்: திரு. வெ. சலையழகன், உப தலைவர்: திரு. தி. சிறிகந்தமூர்த்தி, செயலாளர்: திரு. வே. ஞானகுரு, உப செயலாளர்: திரு. ஆ. உமாமுகன், பொருளாளர்: திரு. அ. கருணைகரன், எண்பரிசோதசர்: திரு. தி. குகனேசன், நிர்வாக உறுப்பினர்கள்: திரு. பொ. சுந்தரன், திரு. க. சதானந்தன், திரு. க. திருச்செல்வம், திரு. பா. ஜெயக்குமார், திரு. ம. திருச்செல்வம், திரு. ஏ. சிவநாயகம். (இ-161)

# படையினர் தாக்கி உயிரிழந்த அகதிகள்

இளவாலை, ஜூன் 14

படகில் சென்ற அகதிகள் மீது கடற்படையினர்நடத்தியதாக்குதலில் உயிரிழந்த மூன்றுபேர் வெள்ளியன்று அடையாளம் காணப்பட்டனர்.

சிவக்கொழுந்து பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை உருத்திரன், இரத்தினசிங்கம் சந்திரசேகரம் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

[illegible] யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து நெடுந்தீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே இவர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

படகில் பயணம்செய்த ஏனையோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நல்லூர் சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் அகதிகளாக இருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-148)

# ரயிலுக்கு குண்டுவைக்க முயன்ற இளைஞர் கைது!

## நானுஓயாவில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 14

கடந்த புதன்கிழமையன்று பதுளையிலிருந்து கொழும்பிற்குச் சென்றுகொண்டிருந்த ரயில் ஒன்றை நானுஓயாவில் வைத்துக் குண்டு வைத்துத் தகர்க்க முயன்றதாகக் கூறப்படும் தமிழ்இளைஞர் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது.

இந்த இளைஞர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

மேற்படி ரயில்பாதையில் பாலம் ஒன்றைக் குண்டுவைத்துத் தகர்க்க முயற்சித்தபோது இவர் கைது செய்யப்பட்டதாகவும் —

அவரிடமிருந்து 11 கிலோகிராம் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும் அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது. (உ)

# பெண்கள் சுயதொழில் மூலம் பணம் சம்பாதிக்கவே தொழிற் பயிற்சி நிலையங்கள்

உருத்திரபுரம், ஜூன் 14

எமது நாட்டுப் பெண்கள் சுயதொழில் மூலம் பணத்தைச் சம்பாதிக்க வழி செய்யும் நோக்கத்தோடு அரசாங்கம் தொழிற் பயிற்சிகளை அளித்து வருகிறது.

அதே போல கிளிநொச்சிப் பெண்களுக்கும் உதவுவதற்காக ஜெயந்தி நகர் மாதர் சங்கக் கட்டடத்தில் மாதர் சங்கத்தின் உதவியுடன் தையல் பயிற்சி, சிகை அலங்காரம், சமையற்கலை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மாதர் சங்கத்தில் நடைபெற்றுவரும் தையல் பயிற்சி, சிகை அலங்காரம், சமையல் கலை பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவிகள் மத்தியில் உரை ஆற்றிய கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசா மேற்கண்டவாறு கூறினார்.

ஜெயந்தி நகர் மாதர் சங்கத் தலைவி சங்கீத பூஷணம் திருமதி ரி. பகவதி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. குணராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பூநகரிக்குக் கொண்டு செல்ல இருந்த இப் பயிற்சி நிலையம் ஜெயந்தி நகர் மாதர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆதலால் இப்பகுதிப் பெண்பிள்ளைகள் இப் பயிற்சியை ஒழுங்காகப் பெற்று தங்கள் பிற்கால வாழ்க்கையை வளம்படுத்தவேண்டும்.

ஜெயந்திநகர் மாதர் சங்கம் திறம்படச்செயல் படுகிறது. அதன் தலைவி இக்கட்டடத்தைக் கட்டி முடிக்க மேலும் 15 ஆயிரம் ரூபா வேண்டுமெனத் தெரிவித்தார்.

இக்கட்டடத்தைக் கட்டி முடிக்க 15 ஆயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கித் தருவோம்.

இப்படி அவர் கூறினார். மாவட்ட அதிகாரி (கிராம அபிவிருத்தி) திரு. என். செல்வராஜ், கிராம சேவையாளர் திரு. எஸ். தர்மபாலன், ஆசிரியை நீற்று ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ-68)

## இன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் நாகபூஷணி, சரஸ்வதி, மகா இலட்சுமி நூதன உற்சவ மூர்த்திகள் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெறும்.

மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்துஇன்று 4 மணிக்கு விசேஷ பூசை நடைபெற்று, சரஸ்வதி, நாகபூஷணி, மகா லட்சுமி திருவீதி உலா நடைபெறும். (அ)

## சாவகச்சேரியில்

சாவகச்சேரி, ஜூன் 14

சாவகச்சேரிப் பகுதியில் மாவிற்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

சாவகச்சேரித் தேநீர்க் கடைகளில் சில தினங்களாக அப்பம், பிட்டு, தோசை தயாரிக்கப்படுவதில்லை. பாணும் இல்லை. கடை உணவை நம்பி இருப்பவர்கள் ஏமாற்றம் அடைகின்றனர். (இ-31)


## இடம்மாற்ற அறிவித்தல்

தற்போதைய சூழ்நிலை காரணமாக, ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், பாதுகாப்பை முன்னிட்டு எமது ஸ்தாபனம் கீழ் வரும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்

333, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம் (3204)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாமல் இருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்.

— பைபிள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
14.6.1987 த.பெ.இல: - 23

## பாடம் புகட்டுக!

அரசியல் வேறு; மனிதாபிமானம் வேறு. உணவு கிடைக்காமல் பஞ்சத்தின் காரணமாக பட்டினி கிடப்பவனுக்கு நிவாரண உணவுப் பொருள் வழங்குவது மனிதாபிமான நடவடிக்கை. அதனை ஒரு நாட்டின் மீதான ஆக்கிரமிப்பாக, அரசியல் படை எடுப்பாகக் கருதுவது அல்லது காட்டிக் கொள்வது ஒரு பக்கம் சார்ந்த பார்வை.

இந்தியாவின் ஒன்றரை மணி நேர ''ஒப்பரேஷன் பூமாலை'' செயற்பாட்டின் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவுப் பொதிகள் தரை இறக்கப்பட்டமை ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குச் சிற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

''ஒப்பரேஷன் பூமாலை'' மூலம் தங்கள் தலைகளை இந்தியா சீவிவிட்டது என்ற தோரணையில் ஸ்ரீலங்கா அரசாங்கத் தலைவர்கள் கோபாவேஷம் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவைப் பாதகனாகக் காட்டப் படாதபாடு படுகிறார்கள்! சொந்த நாட்டு மக்களைக் கொல்லும் பாதகர்களாகத் தாம் இருக்கும் போது, பசித்தவனுக்கு உதவும் தர்மம் புரிந்த இந்தியாவை இவர்களால் எப்படிக் கீழ் நிலைக்குத் தள்ள முடியும்? புத்தமும், காந்தியமும் பேசும் இவர்களுக்கு தர்மம் தலைகாக்கும் அதுவும் அன்ன- உணவு- ஆகார - தானம் காலங்காலமாக நல்வினை நல்குவது என்பது தெரியாமற் போனது துரதிஷ்டமே!

இந்தியா உணவு உதவி வழங்கியதும், அடுத்த சிலமணி நேரத்தில் 900 தொன் உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப் போவதாக ஸ்ரீலங்கா அரசு வானொலி மூலம் ஓலமிட்டது.

ஆனால் அரசாங்க உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களை எடுக்கச் சென்ற அரச அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது அரச படை!

சொல்வது ஒன்று செய்வது மற்றொன்று என்று 'புகழ்' வாங்கியிருப்பது ஸ்ரீலங்கா அரசு என்பது உண்மைதான். எனினும் உலகத்தை எத்தனை காலத்துக்கு ஏமாற்ற முடியும்.

மாவட்ட இணைப்பதிகாரி, மாநாடு ஒன்றில் வைத்து முன் அனுமதி வழங்கியும், அசம்பாவிதம் எதுவும் நடக்காது என்ற உறுதியும் பெற்று உணவுக் களஞ்சியம் சென்ற உயர் அதிகாரிகளுக்கே துப்பாக்கிச் சூடு என்றால் சாதாரண மனிதனின் நிலைமை எப்படி இருக்கும் என்பதைக் கூறவேண்டியதில்லை. வெள்ளிக்கிழமைச் சம்பவத்துக்கு வெளிநாடுகளைச் சேர்ந்த தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் சாட்சிகள்.

வெள்ளிச் சம்பவம் போன்று, கடந்த மாதமும் இராணுவ முகாமுக்கு மாநாடு ஒன்றுக்குப் போன அரச உயர் அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச் சம்பவங்கள் சிவில் அதிகாரிகளைப் பயமுறுத்தி அவர்களது கடமைகளைச் செய்ய விடாது தடுத்து, சிவில் நிர்வாகத்தை இராணுவ மயமாக்குவதற்கான அத்திவாரம் அன்றி வேறல்ல.

உணவுப் பொருள் விநியோகத்துக்கு முட்டுக்கட்டை போடும் படைகள்—அரசாங்கம்—இந்திய நிவாரண உதவியை எப்படித் தடுக்க முடியும்?

இந்தியாவை அடுத்து நோர்வேயும் யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறது. மகிழ்ச்சி தருகின்றது; வரவேற்கிறோம்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களை எந்தளவுக்கு வாட்டி வதைத்து அழிக்கிறது என்பது இப்போது மெதுமெதுவாக உலகுக்குத் தெரியத் தொடங்கி விட்டது.

நோர்வேயைப் பின்பற்றி ஏனைய நாடுகளும் ஸ்ரீலங்காவுக்கான உதவிகளை நிறுத்த வேண்டும். அப்போது தான் உலக நாடுகளால் ஸ்ரீலங்காவுக்குப் பாடம் புகட்ட முடியும். அதன் ஆணவத்தை அடக்கி, அட்டூழியங்கள், அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். நீதியையும், நியாயத்தையும் புரிய வைக்க முடியும்.

### பாதுகாப்பு வரி ரத்து

இஸ்லாமாபாத், ஜூன் 13

பாதுகாப்பு வரியை பாகிஸ்தான் அரசு ரத்துச்செய்துவிட்டது.

இதனை பாகிஸ்தான் பிரதமர் முகமட் கான் ஜுனஜோ விசேஷ தேசிய பேரவைக் கூட்டத்தில் அறிவித்தார்.

1987–88 வரவுசெலவு திட்டத்தில் பாகிஸ்தான் பாதுகாப்பு வரியை அறிமுகம் செய்திருந்தது.

பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல், காஸ் ஆகியவற்றின் விலையையும் கணிசமாக அரசு உயர்த்தி இருந்தது.

இதைஎதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்; கண்டனங்களை எழுப்பினர். மக்களின் எதிர்ப்புக்குப் பணிந்து இப்போது பாதுகாப்பு வரியை பாகிஸ்தான் அரசு ரத்துச்செய்வதாக அறிவித்துள்ளது.

எரிபொருளின் விலையையும் குறைத்துள்ளது. (இ-எ)

# கூர்க்காலந்து போராட்டம் மீண்டும் ஆரம்பமாகும்

## கிஷிங் அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 13

கூர்க்காலந்து கோரிக்கையைஅடையும்இறுதிப் போராட்டத்தை ஆரம்பிக்க இருப்பதாக கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணித் தலைவர் திரு. சுபாஷ் கிஷிங் அறிவித்திருக்கின்றார்.

முதற் கட்டமாக 13 நாள் பொதுவேலை நிறுத்தம் ஒன்று டார்ஜிலிங் தேயிலைத் தோட்டங்களில் நடைபெறும் என்று திரு. கிஷிங் அறிவித்தார்.

மார்ச் மாதம் நடந்த மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் கூர்க்கா மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாக்களிக்கவில்லை.

கூர்க்காலந்து கோரிக்கைக்கு ஆதரவாக அவர்கள் இப் பகிஷ்கரிப்பை நடத்தினர்.

இதை பிரதமர் காந்தி கவனத்துக்கு எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டார். எம்மை நசுக்குவதற்கு மேற்கு வங்காள அரசுக்கு அவர் உதவுகிறார்—

இப்படி திரு. கிஷிங் குற்றஞ்சாட்டியிருக்கிறார். (இ-எ)

### ரஷ்யா கண்டனம்

மாஸ்கோ, ஜூன் 13

பேர்லின் சுவர் பற்றி அதிபர் றேகன் விடுத்த சவால் குறித்து சோவியத் யூனியன் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

ஆத்திரமூட்டும் பேச்சு அது என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் வர்ணித்துள்ளது. (இ-எ)

**வெளி உலகில்**

### "பேர்லின் சுவரைத் தகருங்கள்"

## கோர்பச்சேவுக்கு றேகன் சவால்!

பொன், ஜூன் 13

புதிய போக்கைக் கடைப்பிடிப்பதாகக் கூறும் சோவியத் தலைவர் கோர்பச்சேவ் பேர்லின் சுவரின் கதவைத் திறந்து விடுவாரா? அல்லது சுவரையே உடைப்பாரா?

அமெரிக்க அதிபர் றேகன் மேற்கண்டவாறு சவால் விடுத்தார்.

பேர்லின் சுவருக்கு சில யார் தூரத்தில் நின்று பேசுகையில் அதிபர் றேகன் இந்த சவாலை விடுத்தார்.

வெனிஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு நாடு திரும்புகையில் அதிபர் றேகன் பெர்லினுக்கு விஜயம் செய்தார்.

அப்போது மேற்கு பெர்லின் நகரில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில்,

'திரு. கோர்பச்சேவ் அவர்களே!

நீங்கள் ஜனநாயகம், சுதந்திரம், சமாதானம், தாராளக் கொள்கை பற்றி எல்லாம் பேசுகின்றீர்கள்.

நீங்கள் பேசுவது எல்லாம் உண்மை என்றால் பெர்லினைப் பிரிக்கும் இச்சுவரின் கதவைத் திறந்து விடுங்கள். அல்லது பெர்லின் சுவரையே தகர்த்து விடுங்கள் பார்க்கலாம்'—

இப்படி அதிபர் றேகன் சவால் விடுத்தார்.

(இ-எ)

**சர்வாதிகாரி**

## பொக்காஸாவுக்கு மரண தண்டனை

பாரீஸ், ஜூன் 13

மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் சர்வாதிகாரி பொக்காஸாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

குடியரசின் உயர் நீதிமன்றம் இத் தண்டனையை வழங்கியது.

1956 இல் இருந்து பொக்காஸா சர்வாதிகாரியாக விளங்கினார்.

1956இல் இருந்து பொக்காஸா சர்வாதிகாரியாக விலங்கினார்.

1969 இல் அவரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் தலைமறைவாகியிருந்தார்.

தலைமறைவாக இருந்த போதே அவர் மீது விசாரணை நடத்தப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் பாரிஸில் கைது செய்யப்பட்டு குடியரசுக்குக் கொண்டு வரப்பட்டார்.

மீண்டும் புதிதாக அவர் மீது கடந்த 6 மாதங்களாக நீதிமன்ற விசாரணை நடத்தப்பட்டு கடந்த வியாழன் தீர்ப்புக் கூறப்பட்டது.

(இ-எ)

## 10 ஆயிரம் பேருக்கு ஒரே ஒரு டாக்டர்!

லண்டன், ஜூன் 13

பத்தாயிரம் பேருக்கு ஒரு டாக்டர். இந்தநிலை ஆபிரிக்காவில் நிலவுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் தனது ஆண்டறிக்கையில் இப்படித் தெரிவித்து உள்ளது.

1980–86 க்கு இடைப்பட்ட ஆய்வில் இருந்து இது தெரியவந்திருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது. (இ-எ)

## உள் விவகாரங்களில் பாக் தலையிடுவதாக இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 13

இந்தியாவின், உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதாக குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இந்தியாவின் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

அண்மையில் புதுடில்லியின் மீரட் நகரில் இந்து- முஸ்லிம் கலவரங்கள் இடம் பெற்றன அல்லவா!

அவை பற்றி பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு ஒருவர் கருத்து வெளியிட்டது இந்திய உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதைக் காட்டுகின்றது.

—இப்படி புதுடில்லி அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

### மேலும் 100 பேர் தமிழகத்தில்

மண்டபம், ஜூன்13

சுமார் நூறு யாழ்ப்பாணத் தமிழ் அகதிகள் நேற்று படகுகள் மூலம் மண்டபம் போய்ச்சேர்ந்தனர்.

கடந்த மூன்று தினங்களில் சுமார் 430 தமிழ் அகதிகள் தமிழ்நாடு சென்றனர். (உ-எ)

### வளைகுடாவில் கிரேக்க கப்பல் மீது தாக்குதல்

பஹ்ரான், ஜூன் 13

கிரேக்க நாட்டு எண்ணெய்க் கப்பல் ஒன்றின் மீது வளைகுடாவில் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லையாயினும் கப்பல் சேதமடைந்தது.

வளைகுடாவில் ஈரானுக்கும் ஈராக்குக்கும் யுத்தம் ஏற்பட்ட பின்னர் முந்நூறுக்கு அதிகமானகப்பல்கள் தாக்குதலுக்குள்ளாகின.(இ-எ)

# இலங்கையின் இராணுவத் தாக்குதலை இந்தியா முறியடிக்க வேண்டும்

### "இந்து" நாளிதழ் ஆசிரியர் தலையங்கம்

இனப்பிரச்சினை தொடர்பாக ஜூன் ஆறும் திகதிய இந்து நாளிதழில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தினை இங்கு வெளியிடுகிறோம்.

ஐந்து விமானங்கள் மூலம் உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்பட்ட செயலை இந்திய மக்கள், இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் உலகில் நல்லெண்ணம் படைத்த சகலரும் பாராட்டுவார்கள்.

வரலாற்றில் முன்னெப்போதும் காணாத அளவு இனப்படுகொலைக்கு ஆளாகி அல்லலுறும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உணவுப் பொதிகளை விமானங்கள் மூலம் வழங்கிய செயல் உண்மையில் ஓர் அடையாள நடவடிக்கை ஆகும்.

கொழும்பின் தலைக்கனம் காரணமாக மென்மை நடவடிக்கைகள் இயலாது போகவே விமான நடவடிக்கை தவிர்க்க முடியாத ஒன்றாகியது.

இதுபற்றி எவ்வித சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

#### நீதியின் பக்கம்

இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய அரசும் மக்களும் நீதியின் பக்கம் உறுதியுடன் நிற்கிறார்கள்.

தேவைப்படின் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதில் திடமாக உள்ளனர்—என்பது விமானச் செயற்பாடு தரும் செய்தி என்று திரு. ஜெயவர்த்தனவும் அவரது சகாக்களும் விளங்கிக் கொள்வது அவசியம்.

இனப்படுகொலை நெருக்கடி நிலவும் இலங்கையின் எல்லையில் இந்திய அரசு உள்ளது.

பிரேமதாசாக்களும், அத்துலத்முதலிகளும் மேற்கொள்ளும் சுய பாராட்டுக்களும், தூற்றுதல்களும், பைத்தியக்காரத்தனமான தலைமைப் போக்குகளும், அவலம் கலந்த கோமாளித்தனமும் இந்தப் பாரிய யதார்த்த உண்மை நிலைமையை மாற்ற முடியாது.

இலங்கை ஆட்சியாளர் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் மிருகத்தனமான போக்குக்கும் நடவடிக்கைகளுக்கும் பிராந்திய ரீதியாகவும், அரசியல் இராணுவ வகையிலும் சாட்டையடிகொடுக்கும் திறன் இந்தியாவுக்கு உண்டு என்பதைத் தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள ஒரு குழந்தைக்குத் தானும் தெரிந்திருக்க வேண்டும்.

இது ஒரு பிரச்சினை அல்ல.

#### இலங்கை ஏமாற்றியது

1985 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியா கையாண்ட உத்தியோக பூர்வக் கொள்கையின் சாதனைகளை மீளாய்வு செய்வோமானால் புதுடில்லி கொழும்பினால் ஏமாற்றப்பட்டுள்ளது என்பது விளங்கும்.

இதனை ராஜீவும் அண்மையில் ஏற்றுக் கொண்டுள்ளார்.

தமிழர்களுடன் உள்ள நெருக்க உணர்வைப் பலவீனப்படுத்தல், ஓர் உறுதியான அடிப்படையும், தொடர்ச்சியான உத்திகளும் இல்லாமை மேலெழுந்த வாரியான, ஒருங்கிணைப்பு இல்லாத தன்மை ஆகியவற்றைக் கொண்ட 1985 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட இந்திய அணுகு முறையினை இந்து மற்றும் ஏனைய பத்திரிகைகள் தொடர்ச்சியாகக் கண்டித்துள்ளன.

இந்தப் பழைய அணுகு முறை ஒழிந்து விட்டது என்பதையும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான உணர்வுகளை மதிக்கும் நிலைப்பாடு உருவாகி உள்ளது என்பதையும் விமானம்மூலம் உணவுப் பொதிகளை வீசியதன் மூலம் இந்தியா இப்போது உணர்த்தி உள்ளது.

பாதிப்படைந்த தமிழ் மக்களுடன் மனிதாபிமான அரசியல் ரீதியில் ஏற்பட்டுள்ள நெருக்க உணர்வை விவேகபூர்வமாகவும் தீரத்துடனும் கட்டி எழுப்ப இந்தியா முன்வரவேண்டும்.

இது இந்தியாவின் கரத்தில் தங்கி உள்ளது.

ஜெயவர்த்தன ஆட்சி இருவழிப் பாதை மூலம் தீங்குதரும் இராணுவத் தீர்வை நாடியமை காரணமாகத்தான் இலங்கையில் இந்த நெருக்கடி நிலைமை உருவாகியது, இலங்கை இந்திய உறவில் மாற்றமும் ஏற்பட்டது.

இன்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு உள்ள இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களுக்கு ஓர் ஆபத்தாகும்.

இந்த இராணுவத் தாக்குதல் தொடருமானால், அல்லது விரைவில் நிறுத்தப்படாவிட்டால், ஆயுதந் தாங்கிய தீவிரவாதத் தமிழ் இயக்கங்களின் முக்கியமாக ஈரோஸ் ஒத்துழைப்புடன் இயங்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின்-பாரிய ஒத்துழைப்புடன் ஒரு வகையான நேரடி நடவடிக்கை மூலம் இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளின் முதுகை ஒடிக்கும் கடப்பாடு இந்திய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் உண்டு.

டிசம்பர் 19ஆம் திகதிக்கு முந்திய நிலைக்கு இலங்கை இராணுவ நிலைகள் திரும்பும்வரை நீதியான பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பேச்சுக்கே இடமில்லை.

இது பேச்சுவார்த்தைச் சூழலில் தமிழர் அணியைப் பலவீனமான நிலையில் இருக்கச் செய்யும்.

சரியான நடவடிக்கைகளையும் அணுகு முறையையும் கடைப்பிடித்தால் இலங்கையில் மீண்டும் சகஜ நிலையும் அரசியல் விவேகமும் நிகழ்வதற்கு இன்னும் காலம் பிந்தவில்லை. ★

### விபத்து மரணம் என்று தீர்ப்பு

சாவகச்சேரி, ஜூன் 14

விசுவமடுவைச் சேர்ந்த த. ஏரம்பமூர்த்தி என்னும் கமக்காரருடைய மரணம் விபத்து மரணம் என சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ந. தர்மேந்திரன் தீர்ப்புவழங்கினார்.

தமது டிராக்டர் இயங்காததால் மகனைக் கூப்பிட்டு சாரதி ஆசனத்தில் இருத்திவிட்டு அக்சிலேட்டரை அமர்த்தும்படி சொல்லி வேறு இருவரின் உதவியுடன் டிராக்டரை தள்ளினாராம்.

சடுதியாக டிராக்டர் ஸ்ராட் பண்ணி வேகமாக ஓடியது. இவர் பாய்ந்து டிராக்டரை நிற்பாட்ட முயற்சித்த போது நிலத்தில் விழ டிராக்டரின் பின்சில்லு இவர் மேல் ஏறியது.

உடனே கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸில் சாவகச்சேரிக்குக் கொண்டுவரப் படும் பொழுது மரணமானார். (இ-31)

### கச்சேரியில் அனுமதிபெறலாம்

மட்டக்களப்பு, ஜூன்14

அம்பாறை மாவட்டத்தில் கைதாகி மேல் விசாரணைக்காக பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களை உறவினர்கள் பார்வையிடுவதற்கான அனுமதியை இனி அம்பாறை கச்சேரியில் பெறலாம்.

அக்கரைப்பற்று பிரசைகள் குழுவினர் மட்டக்களப்பு— அம்பாறை மாவட்டப் பிரசைகள் குழுச்செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து மூலம் மாவட்ட இணைப்பதிகாரி கேர்ணல் டேவிந்த கலுபார்ணவுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. (இ-21)

### நவக்கிரக மண்டபம்

வட்டுக்கோட்டை, ஜூன் 14

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமியார் கோவிலில் ''நவக்கிரக மண்டபம்'' ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

சித்தன்கேணி கலை நகரைச் சேர்ந்த பிரபல ஸ்தபதி சிற்ப சிகாமணி திரு. சி. செந்தூர்ராஜா வினால் உருவாக்கப்படும் இம் மண்டபம் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

வெளிநாடுகளில் வேலை செய்யும் அராலி வடச்கு வாலிபர்களின் உபயமாக இது அமைக்கப் பட்டு வருகிறது.

(இ-161)



**பொய்யாமொழி**

**குறள்:**

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகிவிடும்.

**பொருள் :**

ஒரு மரத்தின் நுனிக் கொம்பில் ஏறியவர், அதையும் கடந்து மேலும் ஏற முனைந்தால், அவருடைய உயிருக்கு முடிவாக நேர்ந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 MONTHS - WEEKEND CLASSES
Commencement 25-04-1987
FEES; Rs. 1500/-
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, — Jaffna
13, Rasavinthodam Lane, Jaffna
Phone; 24201

# உதயன்

14 — 06 — 1987 ஞாயிற்றுக்கிழமை

"TOEFL"
Weekend Classes, Duration - 8 Months
Full Fees 250/- only
Commencement; 11-04-1987
Lectures by: Popular English Lecturer
Mr. Kandiah Pavarandra
Cantabia Institute
21, Main Street, — Jaffna
Phone 24201
13, Rasavintbodam Lane, Jaffna

## வித்தாரம்

என்ன முரளியார்! கண்டு கனநாளாய்ப் போச்சு! கனநாளாய் என்ன, மாதக்கணக் காய்ப் போச்சு.

இடையிக்கை எத்தினை விஷயங்கள், முக்கிய மான காலங்களிலை உன்னைச் சந்திக்க முடிய யில்லையே எண்டு எனக்குப் பெரிய கவலை. சுவையான பல சமாச்சாரங்களை உன்னோடு பங்கிட்டுக்கொள்ள முடியயில்லையே எண்டும் பெரும் கவலைப்பட்டேன்.

எங்கடை சனத்துக்கு எத்தனை கஷ்டங்கள், சோதனையள். அப்பப்பப்பா! நான் வாரியாச் சொன்னல் கூடப் பெரிய புத்தகம் வந்திடும். நிமிஷத்துக்குநிமிஷம் எ..லே சம்பவங்கள் நடந்திச்சுது. சனம் பட்ட பாடு. அதுவும் மே மாதம் 26 ஆம் திகதி திடீரென வந்த ஊரடங்கிற்குப் பிறகு சனம் பட்ட கஷ்டங்களை எழுதி முடியாதப்பா!

நீ சரியான நேரம் பாத்துக் கொழும்புக்குப் போய் இப்பதான் வந்திருக்கிறய். இஞ்சை நடந்த அக்கிரமங்கள், அநியாயங்கள், காட்டுத் தர்பார்கள் எண்டு பலரகம். சனம் அந்தரிச்ச அந்தரிப்பு.

வடமராட்சியைக் கைப்பற்றிவிட்டதாய் அரசாங்கம் ஜம்பம் அடிச்சது தான் உங்களுக்குக் கொழும்பிலை தெரிஞ்சிருக்கும்.

இஞ்சை ஒரு அட்டூழிய சரித்திரமே படைக்கப்பட்டு, அதன்மூலம்தான் படையள் வடமராட்சியிலை நிலை கொண்டிச்சினம். உலகத்திலேயே அங்கை நடந்தது போலை காட்டுமிராண்டித் தனம் வேறு எங்கையும் நடந்திருக்க முடியாது.

பொதுசனம், தமிழ்ச்சனம் எல்லாம் எறும்பைவிட அற்பனுத் தெரிஞ்சுது ஆயுதப் படையளுக்கு. சுடு, எரி, வெட்டு, கொத்து என்று எல்லா ரக மிருகத்தனங்களும் அங்கை நடந்திது. குண்டு வீச்சு, நேபாம் குண்டு வீச்சு, சூடு; ஆகாயத்திலை இருந்து சூடு, கடலிலை இருந்து சூடு, நிலத்திலை இருந்து ஷெல் எண்டு எல்லா ரக இராணுவத் தர்பார்களும் வடமராட்சி மண்ணிலை நடந்திது.

21 நாள் குழந்தை முதல் 80 வயதுக் கிழவன் வரை எல்லோருமே அவைக்குப் பயங்கரவாதியள் தான்.

அமைச்சர் அத்துலத்தொடக்கம் சிறில் ரணதுங்கா இடைப்பட்டு பெரிய பெரிய கப்டன்மார், லெப்டினட்மார் ஈருக இஞ்சை வந்து கூடாரமடிச்சுத்தான் "ஒப்பறேஷன் லிபரேஷன்" நடத்தினவை.

அதுக்குப் பிறகு தான் இந்தியாவுக்கு ஒருமாதிரி கண் திறந்திது. உடனை அங்கை உள்ளவை ஒரு "ஒப்பறேஷன் ஜெலிபிஷ்" நடத்திச்சினம்.

அது தானப்பா அந்த பத்தொன்பது படகு விவகாரம். அதோடை தங்களுக்கு வெற்றி எண்ட இறுமாப்பிலை இருந்த ஶ்ரீலங்காவை திடீரென நடுங்கவைக்க இந்தியா வகுத்தது தான் "ஒப்பறேஷன் கார்லண்ட் (பூமாலை)"

இந்தியா ஈழத்தமிழருக்குப் போட்ட பூமாலையோடை ஶ்ரீலங்கா இப்ப கொஞ்சம் அடங்கிப் போய் இருக்கினம்.

அடுத்தது இனி நடக்கப்போறது என்ன ஒப்பறேஷன் ஆருக்குத் தெரியும். ஆற்றை "ஒப்பறேஷன்" முந்துதோ அதுவும் தெரியாது!

எண்டாலும், அடுத்தது "ஒப்பறேஷன் ஸ்ரீலாம்" அது தான் "இரும்பு ஒப்பறேஷனும்" எங்கடை தம்பிமார் துவக்கு வாங்கலாம் எண்டு ஒருகதை.

"ஒப்பறேஷன் வெள்ளைச் சீலை (வைற்குளோத்) மட்டும் இப்போதைக்கு இல்லை எண்டது நிச்சயம்.

கிண்டேடி

# இராணுவ நடவடிக்கையால்

# அபிவிருத்தி வேலைகள் பெரும் அளவு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

குடாநாட்டின் மீதான அரசின் திடீர் இராணுவத் தாக்குதலால் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி வேலைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான இவ்வருட முதற் கட்ட நிதி மிகவும் தாமதமாகவே வந்து சேர்ந்தது.

இதனுல் அபிவிருத்தி வேலைகளை மிக குறுகிய கால இடைவெளியில் விரைவாக செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அதிகாரிகள் உள்ளாகி இருக்கின்றனர்.

இந்நிலையில் அரசின் திடீர் இராணுவ நடவடிக்கைகள், ஊரடங்கு உத்தரவுகள் ஆகியவற்றுல் அபிவிருத்தி வேலைகள் மேலும் தடைப்பட்டுள்ளன.

அபிவிருத்தி நிதி ஒதுக்கப்பட்டுள்ள சில பாடசாலைகள், அலுவலகங்கள் தற்போது இயங்காமலுள்ளன.

அபிவிருத்தி செய்ய வேண்டிய பல இடங்களுக்கு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அதிகாரிகள் செல்லமுடியாதுள்ளது.

சென்ற வருட தொடர் வேலைகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிதியை இந்த வருடம் புதிய வேலைத் திட்டங்களுக்கு பாவிக்கவேண்டிய அவசியம் ஏற்படலாம். அந்த வகையில் பல இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்படி அவர் மேலும் கூறினுர். (இ-ள)

## வடமராட்சியில் வீடு வீடாகத் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமராட்சிப் பகுதியில் நேற்று சிப்பாய்கள் வீடு, வீடாகச் சென்று சோதனை நடத்தினர்.

நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் கவசவாகனங்கள் டிரக்குகள் சகிதம் வீதிகளில் ரோந்து புரிய ஏனைய சிப்பாய்கள் வீடுகளில் புகுந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சில இளைஞர்கள் சிபாய்களினுல் விசாரணைக்குப் உட்படுத்தப்பட்டபோதிலும் பின்பு விடுதலை செய்யப்பட்டனர். (இ-10)

## முதல்நாள் இடிந்த அந்தக்கட்டடம்

கொழும்பு, ஜூன் 14

கடந்த வியாழன் பௌத்த சின்னங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட அனுராதபுரம் மிரிஸ வெத்திய மகா சைத்திய கட்டடத்தின் ஒரு பகுதி அதற்கு முதல் நாள் இடிந்து விழுந்து விட்டது.

அடுத்த நாள் ஜனுதிபதி ஜெயவர்த்தனுவின் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இத்தகவலை வெளியிட்ட காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா இச் சம்பவம் குறித்து எவரும் கவலைப் படக்கூடாது என்று தெரிவித்தார்.

"ருவான் வெலிசய' தூபராம தாதுகோபுரங்களை துட்டகைமுனு மன்னன் கட்டும் போது இது போன்ற சவால்கள் ஏற்பட்டன. இரண்டு தாது கோபுரங்களும் இடை நடுவில் பல முறை நிலத்தினுள் அமிழ்ந்து போயின" என்றும் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

## அச்சுவேலிச் செய்திகள்

அச்சுவேலி, ஜூன், 14

இராணுவத்தினரால் அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் இரு விஞ்ஞான ஆய்வு கூடங்களும், அலுவலகமும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

விஞ்ஞான ஆய்வு கூடங்கள் திறக்கப்பட்டு மாணவர்கள் பரிசோதனை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் இரசாயணப் பொருள்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று அலுவலகமும் திறக்கப்பட்டு முக்கியமான கோவைகள், தளபாடங்கள் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

மகாவித்தியாலய மாணவர்களின் மேசை கதிரைகள் வீசப்பட்டிருந்தன. வித்தியாலயத்தின் சுற்றுமதிலின் மேற்குப் பக்கமும் தெற்குப் பக்கமும் இராணுவத்தின் பாதுகாப்பு நிலைகளாக பயன்படுத்தப்பட்டதால் மதிலில் 10 அடி இடைவெளியில் துவாரங்கள் போடப்பட்டு இருந்தன (இ-11)

## வதந்தியால் கிலி

அச்சுவேலி, ஜூன் 14

'அச்சுவேலியை விட்டுச் சென்ற இராணுவம் மீண்டும் அச்சுவேலியை நோக்கி வருகின்றது' என்ற வதந்தியை அடுத்து வியாழக்கிழமை அச்சுவேலிப் பகுதி மக்கள் கிலி கொண்டோடினர்.

செவ்வாய்க்கிழமை அச்சுவேலியில் இருந்து இராணுவம் வாபஸ் பெற்றிருந்தது. வியாழக்கிழமை தமது வீடுகளுக்கு திரும்பிய மக்கள் நண்பகல் உணவுவகைகளை சமைத்துக் கொண்டிருந்தவேளை இந்த வதந்தி பரவியது.

இதனுல் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வீதிவழியாக ஓடிச் சென்றனர். (இ-11)

## சேதமடைந்த வீடுகள்

அச்சுவேலி, ஜூன் 14

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலால் அச்சுவேலி நாவற்காட்டைச் சேர்ந்த கந்தன் சிவஞெளிபாதம், எஸ். சரவணமுத்து, கே. தம்பர், எஸ். அழகராசா, எஸ். கந்தசாமி, வல்லி செல்வரத்தினம், சி. அன்னராசா, வ. பொன்னையா, கதிரன் ஆகியோரின் வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. 50க்கும் மேற்பட்ட வீடுகளின் கூரைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அச்சுவேலி வடக்கில் திரு. எஸ். இரத்தினம் என்பவரின் வீடு தீப்பற்றி முற்ருக எரிந்து நாசமானது.

அச்சுவேலி பத்தமேனி, காலாஜைப்பகுதிகளில் புல்டோசரால் வீதியோரங்களில் இருந்த பல வீடுகளின் முன்பக்கம், மற்றும் மதில்கள் சேதமடைந்துள்ளன. (இ-11)

## ஆச்சிரமத்தில் அகதிகள்

அச்சுவேலி, ஜூன் 14

அச்சுவேலி, காங்கேசன்துறை பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகள் குடும்பங்கள் பல மருதனுமடம் ஆச்சிரமத்தில் தங்கி உள்ளன,

மருதனுமடம் ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும் 350க்கு மேற்பட்ட அகதிகளுக்கு ஆச்சிரம நிர்வாகிகள் உணவு மற்றும் வசதிகளைச் செய்துகொடுத்துள்ளனர். (இ-11)

தட்சரின்

## புதிய அமைச்சரவை செவ்வாயன்று பதவி ஏற்கலாம்!

லண்டன், ஜூன் 13

பிரதமர் மார்கரட் தாட்சரின்புதிய அமைச்சரவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பதவி ஏற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வாரஇறுதியில் புதிய அமைச்சரவையில் யார் இடம்பெறுவர் என்று அறிவிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

திருமதி தாட்சரின் தற்போதைய அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட மாட்டா என்றே அரசியல் அவதானிகள் ஜோஸ்யம் தெரிவித்திருக்கின்றனர்.

தற்போதைய உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோர் தொடர்ந்தும் அப்பதவிகளை வகிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சென்ற வியாழன் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்முடிவுகளின் இறுதி நிலவரம் வருமாறு:

கன்சர்வேட்டிவ் கட்சி: 376.

தொழிற்கட்சி: 229.

ஏனையகட்சிகள்: 45. (இ-எ)

இந்திய விமான ஊடுருவல்

## சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பிடம் முறையீடு

கொழும்பு, ஜூன் 14

இந்திய யுத்த விமானங்கள் இலங்கையின் ஆகாயப் பிராந்தியத்தினுள் அத்துமீறல் செய்ததுகுறித்து சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பிடம் முறையிடப்பட்டுள்ளது.

ஶ்ரீலங்கா சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்கள இயக்குநர் திரு. உபாலி மலால்கொட இந்த முறைப்பாட்டைச் செய்திருக்கின்ருர்.

இந்தியாவின் அத்துமீறல்இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்துக்குப் பெரும் அபாயத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது மட்டுமல்ல, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டவிதிகளை மீறுவதாகவும் அமைந்தது.

இப்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## 4 தினங்களில்....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அகதிகளில் ஒருவர் சொன்னுர்.

இந்திய விமானங்கள் மூலம் போடப்பட்ட உணவு, இரண்டு நாட்களுக்கேபோதுமானதானவையாக இருந்தன— இப்படி அந்த அகதி மேலும் சொன்னுர்.

இப்படி ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

## புதுடில்லி வீடியோ பொய்யாம்

கொழும்பு, ஜூன் 14

யாழ் குடாவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் பற்றி புதுடில்லியில் ஐம்பதுக்கும்அதிகமான வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குக் காட்டப்பட்ட வீடியோ படம் உண்மைக்குப்புறம்பான நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது.

இப்படி ஶ்ரீலங்கா அரசு சுண்டனம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் உள்ள ஶ்ரீலங்கா தூதர் பெர்னுட் திலகரத்தின இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை சகல ராஜதந்திரிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிருர். (இ-எ)

புதிய 'புருடா'!:

## பிரபாகரனை கைது செய்ய உதவினுல் பரிசு 2 லட்சமாம்

கொழும்பு, ஜூன் 14

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனைக் கைது செய்யக் கூடிய தகவலைக் கொடுப்பவருக்கு 5 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண் (சுமார் 2 லட்சம் ரூபா) பரிசாக வழங்க வெளிநாட்டில் உள்ள இலங்கையர் ஒருவர் முன் வந்திருக்கின்ருர்.

இப்படி ஶ்ரீலங்கா வானெலி நேற்று புதிய 'புருடா' ஒன்றை விட்டது.

தகவல் கொடுப்பவர் பொதுமக்களாக இருந்தாலும் சரி, படையினராக இருந்தாலும்சரி பரிசுக்குத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசுப்பணம் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வைத்து வழங்கப்படும் என்றும் அந்த வெளிநாட்டு இலங்கையர் அறிவித்திருப்பதாக ஶ்ரீலங்கா வானெலி மேலும் தெரிவித்தது.

ஆனுல் அந்த இலங்கையரின் பெயரையும் விலாசத்தையும் வெகுஜென தொடர்பு நிலையம் வெளியிடவில்லை என்றும் வானெலிச் செய்தி மேலும் தெரிவித்தது. (இ-எ)

## இங்கும் கடைகள் இடம்மாறுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 14

சின்னக்கடைப் பகுதியில் உள்ள சில கடைகள் கொய்யாத்தோட்டம், சுண்டிக்குழிப் பகுதிகளுக்கு இடம்மாற்றப்படுகின்றன.

யாழ். கோட்டை முகாமில் இருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகமே இதற்குக் காரணம். (இ-10)

## வடமராட்சி-----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தது.

வடமராட்சி நடவடிக்கையின்போது மொத்தம் 2,676 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் சுமார் 2,00பேர் தீவிரவாதிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏனையோர் விசாரணை முடிந்தகையோடு விடுதலை செய்யப்பட்டு வருகின்ருர்கள்.

இப்படி அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இவர்கள் காலியில் உள்ள உணவுக் களஞ்சிய சாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளார்கள். களஞ்சியசாலை திடீர் தடுப்பு முகாமாக மாற்றப்பட்டது பூசாவின் உபதடுப்பு முகாமாகும், (இ-எ)

## அமைச்சருக்குக் கவலையாக இருக்கிறதாம்

கொழும்பு, ஜூன் 14

வடபகுதி தமிழ் இளைஞர்களைப் பார்க்கும் போது எனக்கு கோபம் வரவில்லை; கவலை தான் வருகின்றது.

இப்படிக் கூறி இருக்கிருர் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

பலாங்கொடையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய போதே அமைச்சர் இப்படிச் சொன்னுர்.

வடபகுதி இளைஞர்கள் இளம்வயதை வன்செயல்களில் கழிக்கின்றனர். இது வருத்தம் தருகிறது.

தீவிரவாதிகள் உற்பத்தியான இடம் வல்வெட்டித்துறை. இப்போது ஆயுத படையினரால் வல்வெட்டித்துறை கைப்பற்றப்பட்டு விட்டது..

இப்படிச் சொன்னுர் அமைச்சர் லலித் அத்துலத்முதலி. (இ-எ)

வியாபாரம் பெருக
விளம்பரம்செய்க

யாழ். ஆஸ்பத்திரி
இரத்த வங்கி

உங்கள் சேவையை
எதிர்பார்த்து நிற்கிறது!
இரத்ததானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!
தானத்தில் சிறந்தது இரத்ததானம்.

உயிர் காக்கும்
சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்.

உயிர் காப்பது
உன்னத பணி.

## பூநகரிப் பகுதி இளைஞர்கள் சிப்பாய்களால் துன்புறுத்தப்படுகிருர்கள்

## பிரசைகள் குழுவிடம் புகார்

பூநகரி, ஜூன் 14

பூநகரிப் பகுதி இளைஞர்களை தினமும் சிப்பாய்கள் பிடித்து சித்திரவதை செய்கிருர்கள்.

இவ்வாறு பெற்ருேர்கள் பூநகரி பிரசைகள் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என்று பூநகரி பிரசைகள் குழுத் தலைவர் பொ. தங்கராசா தெரிவித்துள்ளார்.

பூநகரி வாடியடி இராணுவ முகாமிலுள்ள சிப்பாய்கள் அருகில் நடமாடும் இளைஞர்களை அழைத்துச் சென்று நையப்புடைத்து சித்திரவதை செய்கிருர்கள்.

பெற்ருேர்கள் சிப்பாய்களிடம் சென்று அழுது குழறி பிள்ளைகளை விடுவிக்கவேண்டியுள்ளது.

இவ்வாறு பெற்ருேர் முறைப்பாடு செய்துள்ளனர். (இ-ள)

## வவுனியாவில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வவுனியாவில் நேற்று சிப்பாய்கள் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு பல இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பலர் சிப்பாய்களினுல் கொண்டு வரப்பட்ட முகமூடி மனிதர்கள் முன் நிறுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சிப்பாய்களின் திடீர் தேடுதல் நடவடிக்கையை அடுத்து யாழ். வவுனியா வாகனப் போக்குவரத்துகள் சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தன. (இ-10)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 14-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Sunday June 14, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org